International Journal of Linguistics and computational Applications (IJLCA) ISSN 2394-6385(Print)
Volume 10, Issue 3, July – September 2023 ISSN 2394-6393(Online)

# திருக்குறளில் வாழ்வியல் மேம்பாடு
# பிறப்பொக்கும்எல்லாஉயிர்க்கும் (குறள்.972)

சா.திருப்பதிசாமி
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), முதுகலை & தமிழாய்வுத்துறை, புதுக்கல்லூரி தன்னாட்சி சென்னை - 600014

எல்லா உயிர்க்கும் பிறப்பு என்பது பொதுஇயல்பு என்று அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்தியது திருக்குறள். உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொருளுரை, தெய்வநூல், திருவள்ளுவம் என ஆகச்சிறந்த பெயர்களைக்கொண்டு இவ்வுலகில் மானுடம் திறம்பட மேம்பாடடைய வழிவகை உரைக்கும் நூல் திருக்குறள். வையம் வாழ்வாங்குவாழ அறம், பொருள், இன்பம் என்று முப்பால் அதிகாரங்களை குறள்வெண்பா வடிவில் எடுத்துரைத்தரைத்துள்ளார் வள்ளுவப்பெருமகனார்.

உலகத்தமிழர்களாலும் பிறஇனத்தவராலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் பின்பற்றி கொண்டாடப்படும் நீதிநூல் திருக்குறள் என்பது சிறப்புக்குரியது. இத்திருக்குறளில் மானுட **வாழ்வியல் மேம்பாடு** என்னும் கருத்தியல் நோக்கோடு அமைவதுதான் இக்கட்டுரையின் பயனாகும்.

திருக்குறள்சொல்லடைவில் "மேன்மை [மேல்1 –மேன்10,மை2] (பண்.) = மேம்பாடு,உயர்வு" *(சாமி.வேலாயுதம்பிள்ளைப.137, திருக்குறள்சொல்லடைவு, மொழியரசிப்பதிப்பகம், 1952 சூலை)* என்று சாமி.வேலாயுதம்பிள்ளை அவர்கள் மேம்பாடு என்ற சொல்லுக்கு மேன்மை, உயர்வு என பொருள்ளுரைக்கிறார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி மேம்பாடுள ன்ற சொல்லுக்கு

1 **<u>மேன்பாடு</u>** mēṉpāṭu (<u>பக். 3364</u>)

மேன்பாடுmēṉ-pāṭu , n. id. +. See **மேம்பாடு**. (யாழ். அக.)

2) **<u>சிறப்பாடு</u>** ciṟappāṭu (<u>பக். 1455</u>) , n. சிற- + படு-.

Excellence, splendour; **மேம்பாடு**. சிறப்பாடுடையர் (தேவா. 500, 4).

3) ***<u>சீர்ப்பாடு</u>*** cīr-p-pāṭu n. id. +.(<u>பக்.1483</u>)

Greatness; **மேம்பாடு**. திருமுனைப்பாடித்திறம்பாடு ஞ்சீர்ப்பாடு

(பெரியபு.திருநாவுக். 11).

4) **தருக்கம்**[1] tarukkam (<u>பக். 1767</u>) n.

Preeminence; **மேம்பாடு**. தவம்புரிதருக்கத்து

(பெருங். இலாவாண. 2, 23).

5) **<u>நயம்</u>** nayam (<u>பக். 2159</u>)

Superiority, excellence; **மேம்பாடு**. இதற்குஅதுநயம்.

6) **<u>நன்மை</u>** naṉmai (<u>பக். 2189</u>)

Superiority; **மேம்பாடு**. (குறள், 300.)

7) **பெருஞ்செய்**peru-ñ-cey , n. id. +. (<u>பக். 2874</u>)

Great

deed; **மேம்பாடுள்ள** செயல்.பெருஞ்செய்யாடவர்

(புறநா. 199).

8) **பெருந்தன்மை**peru-n-taṉmai , n. (<u>பக். 2875</u>)

பெருமை +. 1. High dignity, noble character; **மேம்பாடு**.

9) **<u>பெருமிதம்</u>** perumitam (<u>பக். 2882</u>)

.Greatness; **மேம்பாடு**. பெருக்கம்பெருமிதநீர்த்து

(குறள், 431).

10) **<u>வெற்றிமை</u>** veṟṟimai (<u>பக். 3812</u>)

வெற்றிமை[1] veṟṟimai , n. id. 2. Distinctive greatness; **மேம்பாடு**. ஆரழலாய்நிமிர்

கின்றவெற்றிமையென் (தேவா. 1019, 9).

(தமிழ்ப்பேரகராதி, சென்னைப்பல்கலைக்கழகம், பதிப்பாசிரியர்: வையாபுரிப்பிள்ளை) இவ்வாறாப் பொருள்கூறுகிறது. மேம்பாடு என்ற சொல்லுக்கு


DOI: 10.30726/ijlca/v10.i3.2023.103004

மேற்கண்ட பொருள்கள் அனைத்து வள்ளுவத்தில் பரந்துவிரிந்துக் காணப்படுகிறது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்டது நம்தமிழ்நாடு. ஆம் அதனால்தான் திருக்குறள் உலகப்பொதுமறை எனப்போற்றப்படுகிறது .வள்ளுவத்தின் மாண்பு சொல்லிலடங்காது. இதன் சிறப்புக்கருதியே இந்தியமொழிகளும், உலகமொழிகள் பலவும் திருக்குறளைத் தம்வயமாக்கிக் கொண்டுள்ளன . இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவப்பெருந்தகை எடுத்துரைத்தகருத்துகள் இன்றைக்கும் – ஏன் ?– என்றைக்குமே பொருந்தக்கூடியவனவாயுள்ளன. வள்ளுவத்தில் கட்டுக்கடங்காத கற்பனையில்லை; பொய்யும்புரட்டுமில்லை; மனிதன் வாழ்வாங்குவாழ்வதற்குரிய வழிமுறைகளையே வள்ளுவர் வகுத்துரைக்கிறார். "என்று மு.தமிழ்க்குடிமகன் வள்ளுவம் உலகப்பொதுமறை என நிறுவி, திருக்குறள் மானுட வாழ்வியல் மேம்பாட்டிற்கான வழிநூல் என எடுத்தியம்புகிறார். (*தமிழ்குடிமகன்.மு, அணிந்துரை, பக்.7,குறளமுதம், தமிழ்வளர்ச்சி இயக்ககம்,1999*)

மனிதன் ஒழுக்கநெறிகளோடு வாழ்ந்து மேன்மைக்கொள்ள அனைத்து மதங்கள், மதசார்பற்றவர்கள், இயக்கங்கள், அரசியல்சார்பு செயல்பாட்டாளர்கள் என பல்வேறு கொள்கை மற்றும் கோட்பாட்டு விளக்கங்கள் பரப்பி கருத்துரைத்தாலும், தமிழ் இலக்கியத்தில்முதன்மையாகவும் தொன்மையாகவும் விளங்கி அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி உலகம் மேம்பாடடைய உயரிய கருத்துகளை அறம், பொருள், இன்பம் என்று முப்பாலதிகாரமான திருக்குறள் மனிதவாழ்விற்கு வழித்துணைக் கையேடாகவிளங்குகிறது.

அறம், பொருள், இன்பம் என்ற இம்முப்பாலதிகாரத்தில் அறத்துப்பால் அறம் பேணுவதை விளக்குகிறது. அதிகாரவைப்பு முறையில் முதலாவதாக அறத்துப்பால் வைத்ததிற்காரணம் இவ்வுலகம் மேம்பாடைய அறம்பேணுதல் முதற்படி. இவ்வறத்தைக்கை கொண்டுதான் பொருள், இன்பம், வீடு என்ற இம்மூன்றையும் அடைதல் கூடும் என்ற அடிப்படையில் அறம் முதலதிகாரமாகவைக்கப்பட்டது. அறம்செயவிரும்பு (*ஔவையார்,ஆத்திசூடி.பா.1,பக்.16, நா. மு. வேங்கடசாமிநாட்டார், 2014)* என ஔவையார் ஆத்திச்சூடியில் முதலாவது கருத்தாக முன்வைகிறார். அறம் தான் மனிதனை மேம்பாடடைய செய்யும் என்பது இதன்மூலம் அறியமுடிகிறது . அறத்திற்குள் அறத்தால் ஏற்படும் வினைப்பயன் பொருள், இன்பம், வீடுபேறு இவை அடங்கும். **மானிடவாழ்வில் மேம்பாடு அடைவேண்டுமெனில் அறத்தையும் அன்பையும் போற்றிப் புகழந்து அதன் வழிநடக்க வேண்டும் என்பதை திருக்குறள் போதிக்கிறது.**

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் .50 )**

**அறம், பொருள் , இன்பம் என்று இவ்வுலக வாழ்வில் இம்மூன்றையும் முறைப்படி கையாண்டு ஒழுக்கநெறியில் வாழும் வாழ்வே வாழ்வாங்கு வாழ்தல் என பொருள் கொள்ளலாம், அறமும், பொருளும், இன்பமும் மனித வாழ்வில் இணைந்திருக்க வேண்டியவை என்று வள்ளுவர் இக்குறளின் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.**

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்.322)**

**அறவழியில் தேடியப் பொருளைப் பகிர்ந்து உண்ணக் கொடுத்துதவி இம்மண்ணுயிர்கள் அனைத்தையும் பேணிக்காத்து வாழும் அறநெறியே நூலோர் கூறும் நெறிகளில் சிறந்த நெறியாகும் என்று இக்குறள் வழி அறிய முடிகிறது.**

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**

**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.(குறள்.44 )**

இம்மானிடம் மேம்பட வேண்டுமானால் எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். என்பதை வலியுறுத்தும் மேற்கண்ட குறளுக்கு கலைஞர் அவர்கள் பழிக்கு அஞ்சாமல் சேர்த்த பொருள் கணக்கின்றி இருப்பினும் அதைவிட, பழிக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைப் பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கையின் ஒழுக்கமே இருக்கிறது. (திருக்குறள், கலைஞர் உரை.பக்.62, 1990) என்று பொருள் கூறுகிறார்.

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**

**இல்வாழ்வான் என்பான் துணை. (குறள்.42)**


DOI: 10.30726/ijlca/v10.i3.2023.103004

ஒருவனுடைய வருவாயை ஆறாகப் பிறிக்கின்றார் வள்ளுவர், ஆறில் ஒருபங்கு அரசனுக்கு வரியாகச் செலுத்துதல் இறைமையாகும் எஞ்சியுள்ளதை இறந்துபட்ட முன்னோர்க்காக ஒருபங்கும் , தெய்வ வழிப்பாட்டுக்காக ஒருபங்கும், விருந்தினர் விருந்தோம்பலுக்கு ஒருபங்கும், சுற்றத்தாருக்கு ஒருபங்கும் , அடுத்த பங்கு தனக்கு என்று தன்னலம் கருதாமல் பகிர்ந்தளித்து வாழும் வாழ்வே இவ்வையகம் மன்பதை வெல்ல வாழ்வாங்கு வாழ வழிச்செய்யும் வழி என்று குறள் வழி காணலாம்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள்.31)

''அறமானது இவ்வுலகத்துநுகர்ச்சி இன்பக்காரணமாகிய செல்வத்தையும்தரும் அதனான்மற்றிவ்வறத்தின் மேலாய் அழியாது நிற்கும் பொருள்யாதோ, இவ்வெழுவகைப் பிறவியிலும் சிறந்த மானிடராயினார்க்கு''எனகாளிங்கர் உரைக்கூறுகிறார். *(ஜகந்நாதன்.கி.வா, திருக்குறள்ஆராய்ச்சிப்பதிப்பு , உரை-காளிங்கர், பக்.31,2ஆம் பதிப்பு-2004)* இவ்வுலகில் அறத்தைக்கை கொள்ளுதலே சிறப்பும் செல்வமுமாகும் அவ்வறம் தான் மானிட உயிர்களுக்கு ஆக்கமளிக்ககுமே தவிர வேறேதுமில்லை என்று காளிங்கர் உரைவழி
அறியலாம்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள்.34)

''ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமிலனாதலே எல்லா அறமுமாம். அதில் அழுக்குண்டாயின் மேற்செய்வனவெல்லாம் ஆரவார நீர்மையஎன்றவாறு.'' *(ஜகந்நாதன்.கி.வா, திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு ,உரை-மணக்குடவர், பக்.33, 2ஆம் பதிப்பு-2004)* என்று மணக்குடவர் உரைக்கொண்டார். மனத்தூய்மையே அறமாகும் , அப்படி மனம் அழுகாறடைந்தால் எந்த நற்செயல் செய்தாலும் அவைவெற்று ஆரவார ஆர்பாட்டமே தவிர வேறேதுமில்லை என குறள் வழி அறியமுடிகிறது.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றாது அறம் (குறாள்.35)

பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல், ஆகிய நான்கு குற்றங்களை தவிர்த்து வாழ்தலே இம்மானிடம் உய்வதற்கு வழியாகும் என்பதை குறள் விளக்குகிறது.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. (குறள்.39)

இன்பம் எது? அறச்செயல்களால் வருவதே இன்பம், பின்மற்றவைகளால் எவைவந்தாலும் துன்பம்தான் புகழல்ல என்பதை வள்ளுவம் இவ்வாறாக அறத்தை விளக்குகிறது.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (குறள்.71)

அன்பை அடைத்து வைக்கும் கதவேதும் உண்டா? இன்னொரு உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோரின் கண்களிலிருந்து வெளிப்படும் மகிழ்கண்ணீர் அதுவே அன்பின் பெருமிதத்தை உயர்த்திக்காட்டும் என குறள் வழி அன்பின் பெருமிதத்தை அறியலாம். இவ்வுலகமானது அன்பால்பி ணைக்கப்பட்டது, வாழும் உயிர்களிடத்தில் அன்பு ,அறனும் சிறப்புடையது. அறத்தால் வந்த பண்போடு அனைவரையும் அன்புபாரட்டி மனிதநல்லுறவுகளை வளர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறது திருக்குறள். இதன்வழி தான் மனித வாழ்வு மேன்மையுறும் .

அன்பும் அறனும் உடைத்தாயில் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள்.45)

அன்பும் அறத்தோடு கூடிய மாசில்லா மனமும் கொண்டோரின் இல்வாழ்க்கை பண்போடு கூடிய பயன்தரத்தக்கது என்று குறள் விளக்குகிறது.

உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் மானிட இனத்திற்கு எவ்வாறு அடிப்படைத் தேவையோ அதேப்போல் அறம், பொரு, இன்பம் இம்மூன்றும் இவ்வுலகிற்கு அடிப்படைத்தேவையாகும் இதை உணர்த்தி வழி நடத்துவதே வள்ளுவமாகும். உலகில் மனிதன் எப்படி வாழ வேண்டும் , எப்படி வாழக்கூடாது எனவும் ஏன்? எதற்கு? எப்படி? என்று ஐய வினாக்களை எழுப்பி வாழ்கைக்கு என்றில்லாமல் சிறப்பான வாழ்விற்கு அறிவுரைவழங்கி


DOI: 10.30726/ijlca/v10.i3.2023.103004

அறிவுநூல்களுக்கெல்லாம் தலையாயநூலாக விளங்குகிறது திருக்குறள். **இவ்வுலக வாழ்வில் மானுடம் மேம்பாடைய முக்காலத்திற்கும் வழிநூல் ,முதன் நூல் திருக்குறள் என இதன் வழி அறியலாம்.**


DOI: 10.30726/ijlca/v10.i3.2023.103004